**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

**O.S. No.76/2017**

Deposition of the C.W.. 2 witness for

Name :. சத்தியதாஸ்
Father's Name :.

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : 26.03.2026

Solemnly affirmed by Thiru/Tmt. Bench Clerk Grade-III, Principal District Munsif Court, Padmanabhapuram in accordance with the Provision of Act XLIV of 1893.

**முதல் விசாரணை.**

நான் இந்த வழக்கின் நீதிமன்ற 2 ஆம் சாட்சி ஆவேன். அழைப்பாணையின் மூலம் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் க. உ. எண் (கட்டிட உரிமை எண்) 110/2015 - 2016 நாள் 15.09.2015 செயல் அலுவலர் நடவடிக்கை எண் 696/அ 1/15 நாள் 25.08.2015 மற்றும் அசல் பஞ்சாயத்து வரைபட அனுமதி பிளான் ஆகியவற்றை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி கட்டிட அனுமதி வரைபடம் **நீ.ம.சா.5** ஆகவும் மற்றும் அதனுடன் உள்ள அறிக்கை **நீ.ம.சா.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. (அசலுடன் ஒப்பிடப்படுகிறது.)

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த கட்டிட அனுமதியின் விண்ணப்பதாரர் யார் என்றால் பிரதிவாதி ஆகும். பிரதிவாதி, எந்த கிராமம் எந்த சர்வே எண்ணில் விண்ணப்பம் அளித்துள்ளார் என்றால் மிடாலம் கிராமம். ரீசர்வே நம்பர் 663/7 எ 1 எ 1 ஆகும். எவ்வளவு ஏரியாவிற்கு கேட்டுள்ளார்கள் என்றால் 8.918 செண்ட் கேட்டுள்ளார்கள். என்று நாங்கள் அனுமதி கொடுத்தோம் என்றால் 15.09.2015 ல் அனுமதி கொடுத்தோம். நாங்கள் அனுமதி வழங்கும்போது ஒரு நிபந்தனை கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அது என்ன நிபந்தனை என்றால் வழிப்பாதைக்கு இடையூறாக கட்டிடம் கட்டக்கூடாது என்று நிபந்தனை வழங்கினோம்.

மேற்படி கட்டிடத்திற்கு போகக்கூடிய வழிப்பாதை கருங்கல் குளச்சலுக்கு செல்லக்கூடிய ரோட்டின் மேற்கு பகுதி என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிக்கு உரிய பொதுப்பாதைதான் கட்டிட அனுமதி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் பாதை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது பொதுப்பாதை என்று குறிப்பிடப்படவில்லை. பிரதிவாதிக்கு கொடுத்த கட்டிட அனுமதி வரைபடத்தின் கிழக்கு பக்கம் வாதியின் சொத்து உள்ளது அதன் கதவு இலக்கம் என்ன என்றால் 15/90 சி ஆகும். கட்டிட அனுமதி வழங்கப்பட்ட கட்டிடமானது ஆர்சிசி ரூப் ரெசிடன்சியல் கட்டிடம் என்றால் சரிதான். இந்த அனுமதிக்காக என்று எவ்வளவு ரூபாய் பஞ்சாயத்திற்கு பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்றால் 7214 ரூபாயும் 15.09.2015 அன்று செலுத்தியுள்ளார்.

நாங்கள் வழங்கிய கட்டிட அனுமதிக்கு முன்பு இடம் பார்வையிட்டு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் 11.09.2015 தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில் பாதை வசதியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி ஆவண எண் 609/1998 கொண்ட பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தை தாக்கல் செய்து அனுமதி கேட்டார் என்றால் சரிதான். மேற்படி

ஆவணத்தில் அயிட்டம் நம்பர் 1ல் 8.918 சென்டும், அயிட்டம் நம்பர் 2ல் 1.082 சென்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1.082 சென்டுதான் கட்டிடத்திற்கு செல்லக்கூடிய வழிப்பாதை என்றால் பாதை என்று குறிப்பிடவில்லை புறஇடம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி 1.082 சென்ட் குளச்சல் கருங்கல் ரோட்டின் மேற்கு பக்கமுள்ளது என்றால் சரிதான். அந்த வழிப்பாதையைத்தான் கட்டிட அனுமதி வரைபடத்திற்கு வழிப்பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி அவருடைய ஆவணங்களுடன் அவரது பட்டா, நிலவரி ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ- 7 ஆவணம் வாதிக்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதி என்றால் நான் அலுவலக ஆவணங்களை பார்க்காமல் கூற இயலாது.

வா.சா.ஆ- 7 ஆவணத்தை சரிபார்த்து சாட்சியம் அளிக்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.